திரு. தி. ரா. மாசிலாமணி அவர்கள் 1989-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை அன்றைய செங்கல்பட்டு மாவட்டம் பூவிருந்தவல்லி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த அப்பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

முற்பகல் 10-05

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. ந. கணபதி, பேரவையின் முன்னாள் துணைத் தலைவர் மறைவு

(ஆ) திரு. கே.பி. கந்தசாமி, முன்னாள் அமைச்சர் மறைவு

(இ) 'முத்தமிழ்க் காவலர்' திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானங்களைப் பேரவைமுன் வைக்கின்றேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், பேரவை முன்னாள் துணைத் தலைவருமான திரு. ந. கணபதி அவர்கள் 13-12-1994 அன்று மறைவுற்ற செய்தி குறித்து இப்பேரவை மிகவும் வருந்துகிறது.

திரு. ந. கணபதி அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டுவரை தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலிருந்தும், 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை சென்னை, மைலாப்பூர் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார். மேலும், அவர், 1974 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் துணைத் தலைவராகச் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளார்.